මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல : LAE/2025/102** **2025.05.27**

## உள்ளூரதிகார சபைகள் தேர்தல் - 2025

### உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அத்தியாயம்)

### 76அ ஆம் பிரிவின் கீழான கட்டளை

உள்ளூரதிகார சபைகள் தேர்தல் முடிவுறுத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு கட்சியினாலும் / குழுவினாலும் குறித்த கட்சிக்கு அல்லது குழுவிற்கு உரியவாறு பெண் உறுப்பினர்கள் உள்ளிட்ட தெரிந்தெடுத்து அனுப்பி வைக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு தேர்தல் முடிவடைந்தவுடனேயே அறிவிக்க வேண்டியிருந்த போதும், தேர்தல் முடிவுற்று இற்றைக்கு 21 நாட்கள் கடந்துள்ள நிலையில் குறித்த தெரிந்தெடுத்து அனுப்பி வைக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் தொடர்பாக இதுவரை தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்படவில்லை என்பதனாலும்,

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சரின் 2424/02 ஆம் இலக்க மற்றும் 2025.02.17 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2025.06.02 ஆந் திகதியன்று உள்ளூரதிகார சபைகளின் பதவிக் காலம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென நியமிக்கப்பட்டுள்ளமையாலும்,

விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரது கட்டளையின் பிரகாரம், உள்ளூரதிகார சபைகளின் பதவிக் காலம் ஆரம்பிப்பதற்கு முன்பாக தெரிவு செய்யப்பட்டுள்ள மற்றும் தெரிந்தெடுத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்கள் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட வேண்டியுள்ளதனால், ஒவ்வொரு கட்சியும், குழுவும் தெரிந்தெடுத்து அனுப்ப வேண்டிய உறுப்பினர்கள் அனைவரின் பெயர்களையும் 2025.05.30 ஆந் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு முன்பாக உரிய உள்ளூரதிகார சபைகளின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டுமென இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

இந்தப் பணிப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2438/13 ஆம் இலக்க மற்றும் 2025.05.27 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக வெளியிடப்பட்டுள்ளதெனவும் மேலும் அறிவிக்கப்படுகின்றது.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழுவுக்காக)